எண்.8282/இசநி/கோ.1/2020
புதுச்சேரி அரசு
இந்து சமய நிறுவனங்கள் மற்றும் வக்ஃபு துறை
மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டிடம் (3வது மாடி)
பேட்டையான் சத்திரம், புதுச்சேரி - 605 009

---------

புதுச்சேரி நாள்:31.03.2020

# சுற்றறிக்கை

பொருள்: இசநி– கொரோனோ வைரஸ் தொற்று – கோயில் நிலங்களில் குடியிருப்பவர்கள் - வாடகை வசூலித்தல் சம்மந்தமாக அறிவுறுத்தல் - தொடர்பாக.

பார்வை: 1. 17.03.2020, 20.03.2020 மற்றும் 27.03.2020-ஆம் தேதியிட்ட இத்துறையின் இதே எண்ணிட்ட சுற்றறிக்கைகள்.
2. 25.03.2020 தேதியிட்ட செயலர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அவர்களின் ஆணை எண்.1703/DRDM/DM/D2/2020.
3. 29.03.2020 தேதியிட்ட நடுவண் அரசின் உள்துறை செயலர், உள்துறை அமைச்சகம் அவர்களின் ஆணை எண்.40-3/2020-DM-I(A).

****

மேலே பார்வையில் கண்டுள்ள சுற்றறிக்கைகள் மற்றும் ஆணையின்பால் கவனம் ஈர்க்கப்படுகிறது.

2. மேற்படி புதுச்சேரி, சுகாதாரத்துறை மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுறுத்தலின்படி மேற்கண்ட சுற்றறிக்கைகளின் வாயிலாக திருக்கோயில்களை பொறுத்தவரை கொரோனா வைரஸ் தொற்று பரவாமல் தடுக்க பல்வேறு வழிமுறைகளையும் மற்றும் விதிமுறைகளையும் கையாளும்படி திருக்கோயில் நிர்வாகத்தினரிடம் அறிவுறுத்தப்பட்டு இருந்தது.

3. பார்வை 3-ல் கண்டுள்ள நடுவண் அரசின் ஆணையின் வாயிலாக தேசத்தின் ஊரடங்கு அறிவிக்கப்பட்ட நாட்களில் வாடகைக்கு குடியிருக்கும் வேலையாட்கள் ஆகியோரிடமிருந்து வீட்டின் உரிமையாளர் வாடகையை வசூல் செய்வதை ஒரு மாத காலத்திற்கு தவிர்த்தல் வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார்.

4. எனவே மேற்கூறிய ஆணைக்கு இணங்கவும் மேலும் மாண்புமிகு புதுச்சேரி முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படியயும் கோயில் மற்றும் வக்பு வாரியத்திற்கு சொந்தமான இடங்களில் குடியிருந்து தவறாமல் வாடகை



Scanned with CamScanner

195

செலுத்திவரும் வியாபார நோக்கமல்லாத (Non-commercial) குடியிருப்போர்க்கு 01.04.2020 அன்று முதல் 30.06.2020 வரை ஆலய நிர்வாகிகள் வாடகை வசூல் செய்வதை தவிர்க்கும்படி அறிவுறுத்தப்படுகிறது. மேற்கூறிய காலக்கெடு முடிந்தவுடன் மேற்குறிப்பிட்ட 3 மாத வாடகையை 3 (மூன்று) தவணைகளாக 01.07.2020 முதல் வசூலிக்க அறிவுறுத்தப்படுகிறது.

5. கோயில் மற்றும் வக்பு வாரியத்திற்கு சொந்தமான இடங்களில் உள்ள தவறாமல் வாடகை செலுத்திவரும் வியாபார நோக்குடன் கூடிய (Commercial) கடைகள் முதலியவற்றை பொறுத்தவரை 01.04.2020 அன்று முதல் 30.04.2020 வரை (ஒரு மாதம் மட்டும்) ஆலய நிர்வாகிகள் வாடகை வசூல் செய்வதை தவிர்க்கும்படி அறிவுறுத்தப்படுகிறது. மேற்கூறிய காலக்கெடு முடிந்தவுடன் மேற்குறிப்பிட்ட 1 மாத வாடகையை 2 (இரண்டு) தவணைகளாக 01.05.2020 முதல் வசூலிக்க அறிவுறுத்தப்படுகிறது.

6. இதனை மிக அவசரம் என கருதவும்.

/ஆணைப்படி/

(ஞா. சச்சிதானந்தம்)
**ஆணையர்**
**இந்து சமய நிறுவனங்கள்**

**பெறுநர்:**

புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சி பரப்பில் அமைந்துள்ள இந்து சமய அறநிலையத்துறையின் ஆளுகைக்கு உட்பட்ட அனைத்து திருக்கோயில் நிர்வாகத்தினர்.

நகல் பெறுநர்:

1. மாவட்ட ஆட்சியர், புதுச்சேரி/காரைக்கால்.
2. இயக்குநர் சுகாதாரத்துறை, புதுச்சேரி.
3. **துணை** மாவட்ட ஆட்சியர்(வருவாய்) (தெற்கு/வடக்கு) புதுச்சேரி/வில்லியனூர். காரைக்கால்.

நகல் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. செயலர்(இசநி), தலைமைச்செயலகம், புதுச்சேரி.
2. செயலர்(வக்பு வாரியம்), தலைமைச்செயலகம், புதுச்சேரி.
3. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தனிச்செயலர், சட்டப்பேரவை வளாகம், புதுச்சேரி.

Scanned with CamScanner